## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.13/2024** **நாள் : 05.02.2024**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) கோயம்பேடு காளியம்மன்கோயில் தெருவில் பிரதான உந்துகுழாய் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் (ஐயப்பன் நகர் 1வது தெரு சந்திப்பு முதல் சாய்நகர் இணைப்பு சாலை சந்திப்பு வரை) 07.02.2024 அன்று காலை 11.00 மணி முதல் 08.02.2024 அன்று காலை 7.00 மணி வரை மண்டலம்–10 (கோடம்பாக்கம் ) - க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) கோயம்பேடு காளியம்மன்கோயில் தெருவில் பிரதான உந்துகுழாய் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் (ஐயப்பன் நகர் 1வது தெரு சந்திப்பு முதல் சாய்நகர் இணைப்பு சாலை சந்திப்பு வரை) 07.02.2024 அன்று காலை 11.00 மணி முதல் 08.02.2024 அன்று காலை 7.00 மணிவரை கோயம்பேட்டில் அமைந்துள்ள சூளைமேடு குடிநீர் பகிர்மாண நிலையம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படவுள்ளது. ஆகையால் மண்டலம்–10 (கோடம்பாக்கம்)–க்குட்பட்ட கோயம்பேடு, சின்மயா நகர், சாலிகிராமம், விருகம்பாக்கம், திருநகர் பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://chennaimetrowater.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள CHN_Metro_Water CMWSSB chennaimetrowater